குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.216/2018

2021 ம் ஆண்டு ஆகஸ்டு 26-ம் நாள் வியாழக்கிழமை அரசு/புகார்தாரர்/எதிரி தரப்பு சாட்சியாகிய 1-வது நபரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.கலைச்செல்வி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு. பழனி | வயது | : 65 |
| த/பெ | : பெரமச்சி கவுண்டர் | தொழில் | : |
| ஊர் | : | சமயம் | : |
| வட்டம் | : | ஜாதி | : |
| மாவட்டம் | : | | |

முதல் விசாரணை.

நான் எல்லாயூரில் குடியிருக்கிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளுக்கும் எனக்கும் தடவழி சம்மந்தமாக தகராறு உள்ளது. 21.10.2017-ம் தேதி மாலை 3.00 அளவில் நானும், எனது மனைவியும் வீட்டில் இருந்த போது ஆஜர் எதிரிகள் சின்னதங்கம், தாமரை செல்வன் ஆகியோர் அங்கு வந்து கெட்டவார்த்தைகளால் திட்டி கல்லாலும், கைகளாலும் எனது நெஞ்சில் குத்தி காயம் ஏற்படுத்தி தடம் விடவில்லை என்றால் என்றைக்கு இருந்தாலும் கூண்டோடு வேகவைத்து விடுவதாக மிரட்டினார்கள். மயக்கத்தில் இருந்த என்னை எனது மகனும், பேரனும் சேலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகாரை போலீசார் நான் மருத்துவமனையில் இருந்த போது என்னிடம் காட்டினார்கள். அதில் நான் கையொப்பம் செய்தேன். அந்த புகார் அ.த.சா.ஆ.1 ஆகும். புகாரை பெற்று கொண்ட போலீசார் என்னிடம் காலை 7.00 மணிக்கு விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

எல்லாயூரில் இருந்து முத்துநாய்க்கன்பட்டி போகும் ரோட்டிற்கு தெற்கு பகுதியில் என்னுடைய காடு அமைந்துள்ளது என்றால் சரியல்ல.மேற்கு பகுதியில் அமைந்துள்ளது. என் நிலத்திற்கு தெற்கு பகுதியில் லட்சுமண முதலியார் இடம் அமைந்துள்ளது என்றால் சரிதான். எதிரிகள் நிலமும் என் நிலத்திற்கு தெற்கு பகுதியில் உள்ளதா என்றால் சரிதான். என் நிலத்திற்கும் லட்சுமண முதலியார் நிலத்திற்கும் இடையே ஒரு இட்டேரி உள்ளது என்றால் சரிதான். அந்த இட்டேரியின் வழியாக தான் எதிரிகளின் நிலத்திற்கு செல்லவேண்டும் என்றால் சரிதான். இட்டேரி எனது காட்டிற்கு கீழ்பகுதியில் உள்ளது என்றால் சரிதான். இட்டேரி என்னுடையது என்பதற்கு போலீசாரிடம் ஆவணம் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். எதிரிகள் என்னை கல்லால் அடித்தார்கள் என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் நான் கூறியுள்ளேன். எனக்கு எங்கெல்லாம் ரத்தகாயம் ஏற்பட்டது என்றால் நெஞ்சிலும், அல்லையிலும் ஆயிற்று. நான் வீட்டில் இருக்கும் போது சம்பவம் நடந்ததாக போலீசார் விசாரணையில் கூறியுள்ளேன். தடம் சம்மந்தமாக எனக்கும், எதிரிகளுக்கும் இடையே உாிமையியல் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது என்றால் சரிதான். லட்சமண முதலியார் இடம் விற்பதாக விற்பணைக்கு பேசி வருகிறார்கள் என்றால் சரிதான். அந்த நிலத்தை வாங்குவதற்காக

எனக்கும் எதிரிகளுக்கும் இடையே போட்டி நிலவி வருகிறது என்றாலும், எனவே தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. என் மகன் என்னை அழைத்து சென்றதாக கூறியுள்ளது. சம்பவ நேரத்தில் இருந்து ஒரு 1/2 மணி நேரம் இருக்கும். என்னை அடித்ததாக கூறப்படும் கல்லை நான் போலீசாரிடம் ஒப்படைக்கவில்லை. நான் ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு சென்றேனா என்றால் சென்று அதன் பிறகு அங்கிருந்து சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். நான் ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு சென்ற விவரத்தை நான் போலீசாரிடம் கூறவில்லை. நான் சேலம் அரசு மருத்துவமனையில் இருந்த போது போலீசாரிடம் மேற்படி விவரத்தை கூறினீர்களா என்றால் கூறிவில்லை. சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், நிலப்பிரச்சனை சம்மந்தமாக நான் பொய் வழக்கு கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை. இல்லை.

ஓம்./-பழனி

ஓம்./- M . A . சுவேதாரண்யன்,
குற்றவியல் நீதித்துறை நடுவர்( FAC ),
ஓமலூர்.